---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தொம்பே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் தொம்பே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை.

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை. | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நியமத்தின் பந்தி 3.28 இன் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலில் இருந்தான காசுப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங் களின் பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 1,206,257 மற்றும் வட்டி ரூபா 6,413,232 அதிகரித்தும் குறைத்தம் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் சரியாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) நியமத்தின் பந்தி 3.29 இன் பிரகாரம் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சல் கணிப்பீடு செய்யும் போது நிலையான வைப்புக்களில் இருந்து கிடைத்த பணம் ரூபா 15,000,000 சீராக்கப்பட்டிருக்க வில்லை. | மேற்படி | மேற்படி |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடப்பாண்டில் கட்டிப் பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 51,439 தொகையும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் தேறிய பெறுமதி ரூபா 1,554,299 தொகையும் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

### 1.6.3. இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு இலக்கம் 16 இன் பிரகாரம் பாலம், வீதிகள், மதகுகள் மற்றும் நூலகப் புத்தகங்களுக்குரிய பெறுமானத் தேய்வு பெறுமதி பேரேட்டுக் கணக்குடன் ஒப்பிடும் போது ரூபா 399,481 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணக்கமின்மைகள் இனங்கண்டு சரிசெய்யப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 760 | 08 வகையான சொத்துக்களில் 14 பொருட்களில் பற்றாக்குறையும், ரூபா 47,562 ஆன 07 நூலகப் புத்தகங்களும் தொலைந்து போய் இருந்தமையும் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகள் நிருவாகத்திற்குரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான கட்டளை 08 | ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் நிதிக்கூற்றுக்கள் அடுத்துவரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2024 ஏப்ரல் 08 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2024 ஏப்ரல் 08 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 45,239,814 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 76,087,748 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 30,429,994 | 22,084,993 | 17,398,976 | 4,686,017 | 30,941,340 | 32,205,831 | 29,907,222 | 8,863,625 |
| (ii) | வாடகை | 24,560,410 | 20,303,817 | 19,292,561 | 1,011,256 | 24,766,609 | 23,014,790 | 23,368,013 | 2,184,428 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,416,500 | 31,376,730 | 31,376,730 | | 1,093,000 | 1,046,094 | 1,046,094 | |
| (iv) | ஏனைய வருமானம் | 314,661,540 | 426,466,332 | 426,466,332 | | 14,720,698 | 148,813,229 | 148,813,229 | |
| | மொத்தம் | 371,068,444 | 500,231,872 | 494,534,599 | 5,697,273 | 71,521,647 | 205,079,944 | 203,134,558 | 11,048,053 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் பின்வருமாறு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 8,863,625 ஆன நிலுவை ஆதனவரி மற்றும் வரி மீதிகளை ஆண்டில் அறவிடல் ரூபா 4,797,294 ஆனமையால் நிலுவை அறவிடலின் சதவீதம் 54 சதவீதமாக இருந்ததுடன் 05 வருடங்கள் முதல் 10 வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 982,961 ஆகவும், 03 வருடங்கள் முதல் 05 | ஏற்றுக்கொள்கின்றோம். | நிலுவை ஆதனவரி மீதி அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு இடையிலான மீதி ரூபா 1,903,390 ஆகவும் காணப்பட்டது. | | |
| (ஆ) | 2023 சனவரி 01 இல் உள்ளவாறு வாடகை வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,765,707 ஆன நிலுவைக் கேள்வி வரி மீதி ஆண்டின் அறவிடல் ரூபா 200,792 ஆனமையால் நிலுவை அறவிடலின் சதவீதம் 11 சதவீதமாக இருந்ததுடன் 01 இற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான நிலுவை கடை வாடகை மீதி ரூபா 115,125 ஆகக் காணப்பட்டது. | மேற்படி | நிலுவை கேள்வி வாடகை மீதி அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் மற்றும் பொறிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர அபிவிருத்தி அதிகார சபையால் ரூபா 68 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சந்தை நடவடிக்கைகளுக்காக 2020 ஆம் ஆண்டின் போது சபைக்கு கையளிக்கப்பட்ட ஒரு மாடியில் 6,380 சதுர அடி அளவான இரண்டு மாடிகளையுடைய கட்டிடத்தில் 87 கடைகள் அளவில் முழுமையாக மேல் மாடி மற்றும் 73 கடைகள் அளவில் தரைமாடியில் ஒரு பகுதியில் வியாபாரிகளினால் பயன்படுத் தப்படாதிருந்தமையும் சந்தை நாட்கள் தவிர மற்றைய 06 நாட்களும் விளைவற்று காணப்படுகின்றமையால் கட்டிடம் மக்களுக்கு ஆக்கபூர்வமாக மற்றும் சபைக்கு வருமானம் கிடைக்கின்ற வகையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | வாராந்த சந்தைக்கு மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டமையால் மேல் மாடி சந்தை முறைக்கு வழங்கும் போது பிரச்சினையுடனான நிலைமை காணப்படுகின்றது. | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்திலி ருந்தும் மற்றும் பிரதேச சபை உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 8,629,760 செலவில் ஒரு மாடியில் 40.25 அடி நீளத்தில் 19.75 அடி அகலத்திலும் ஆன கீழ் மாடியில் 04 கடைகளும், மேல் மாடியில் கூட்ட மண்டபமும் ஆன வகையில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் மீள் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 10,000,000 ஆக இருந்த போதிலும் நிர்மாயிக்கப்பட்ட திகதியில் இருந்து விளைவற்றுக் காணப்பட்டமையால் அதற்காக | இதுவரையில் மின்சாரம் மற்றும் நீரைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் பொது மக்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்துவதற்காக நலன்புரிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. | இலக்கிடப்பட்ட பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவிடப்பட்ட செலவினம் பயனற்றதாக இருந்தது. மேலும் நீர் மற்றும் மின்சாரமும் பெறப்படாதிருந்ததுடன் கட்டித்தில் பொருத்தப்பட்டிருந்த 03 அலுமினிய கதவுகள் மற்றும் யன்னல்களும் யாவும் ஒரு தரப்பினரால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | | |
| (இ) | சபைக்குச் சொந்தமான வீதி செப்பனிடுகை மற்றும் நீர் பௌசர் என்பன 2023 ஆம் ஆண்டு முதல் செயலிழந்து காணப்பட்டது. | வீதிச் செப்பனிடுகையை பழுதுபார்த்து கையளிக்கப்பட்டுள்ளதுடன் தண்ணீர் பௌசர் இயந்திர பொறியியலாளர் அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பழுதுபார்த்து பயன்படுத்துவது வதற்கோ அல்லது முறையான பிரகாரம் விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பரப்பளவு 02 றூட் 19.8 பேர்ச் மற்றும் பெறுமதி ரூபா 200,000 ஆன பொது காணிக்கு தூண் ஒன்றின் மூலம் ஏனைய காணிகளுக்கு நீர் திருப்பி வழங்குதல், நீர் வழிந்தொடச் செய்வதற்கு வடிகாண் காணப்படாமையின் காரணமாக காணி சதுப்பு நிலத்திற்கு உட்பட்டிருந்தது. | காணி உரிமையாளர் குடியிருக்காமையினால் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | பொதுக் காணியின் பகுதி உரிய பிரகாரம் பராமரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுமதி ரூபா 550,000 ஆன பொதுக் காணி நிதிக் கூற்றுக்கள் மற்றும் நில வரைபடத்தின் பிரகாரம் அளவு 03 றூட் 36.4 பேர்ச் ஆக இருந்த போதிலும் நன்கொடை உரித்துறுதி மற்றும் பௌதீக பரிசோதனையின் பிரகாரம் 29.52 பேர்ச் வரை குறைக்கப்பட்டிருந்தது. | உரித்துறுதி மற்றும் பௌதீக பரிசோதனை மேற்கொள்ளப்படும். | காணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | சபைக்குச் சொந்தமான 03 காணிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அனுமதியற்ற நிர்மாணங்கள் அகற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | பெறுமதி ரூபா 46,240,764 ஆன கூட்டுத் தொகையான 03 ஏக்கர் 02 றூட் 18.10 பேர்ச் அளவான 09 காணிகள் சட்ட ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூற்றுக்களில் உரித்துறுதி தயாரிக்கப்படுகின்றது. | உரித்து உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 03 காணிகள் பௌதீக ரீதியில் உறுதிப்படுத்தி மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பௌதீக ரீதியில் காணப்படுகின்றதா என கண்டறிந்த பின் பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படும். | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பீடு செய்து பதிவேடுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |

**3.3 செயற்திட்டம், இலக்குகள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதி ரூபா 22,021,154 ஆன 09 வேலைகள் 2024 மார்ச் 07 ஆம் திகதி வரையில் உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்த போதிலும் பூர்த்தி செய்வதற்கோ அல்லது காலத்தை நீடிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவு அறிக்கை கிடைத்த பின்னர் தண்டப் பணம் அறவிடப்படும். | உடன்படிக்கை காலத்தை பூர்த்தி செய்வதற்கும், தாமதத்திற்காக தாமதக் கட்டணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுததல் வேண்டும். |